# மாலைக்கதிர்

Maalaikkathir

சாயல் - 02 வள்ளுவர் ஆண்டு 2054 வைகாசி 07 திங்கட்கிழமை 20.05.2024 கதிர் 262



யாழ் மண்ணிலிருந்து இணைய வெளிக்கு - Yarl Muttram Youtube Channel




# கிழக்கு அஸர்பைஜானின் வர்சகான் பகுதியில் உலங்கு வானூர்தி விபத்து ஈரான் ஜனாதிபதி இப்ராஹிம் ரைசியும் உடன் பயணித்தோரும் மரணம்!

## அந்நாட்டு அரச ஊடகம் உறுதிப்படுத்தி செய்தி வெளியிட்டது




ஈரானின் எட்டாவது ஜனாதிபதியான இப்ராஹிம் ரைசி, கிழக்கு அஸர்பைஜானின் வடமேற்கு மாகாணத்தில் உள்ள வர்சகான் பகுதியில் உலங்கு வானூர்தி விபத்தில் உயிரிழந்துள்ளதாக அந்நாட்டு அரச ஊடகமான INRA உறுதிப்படுத்தியுள்ளது.

"ஈரானின் எட்டாவது ஜனாதிபதியான இப்ராஹிம் ரைசி, கிழக்கு அஸர்பைஜானின் வடமேற்கு மாகாணத்தில் உள்ள வர்சகான் பகுதியில், அவர் மற்றும் அவருடன் பயணித்த அரச உயர் அதிகாரிகள் சென்ற ஹெலிகொப்டர் விபத்தில் ஞாயிற்றுக்கிழமை வீரமரணமடைந்துள்ளார்" என INRA அறிக்கை வெளியிட்டுள்ளது.

சளைக்க முடியாத மற்றும் கடின உழைப்பாளியான ஜனாதிபதி, தனது தேசத்திற்கு சேவை செய்யும் பாதையில் இறுதித் தியாகத்தைச் செய்துள்ளார் எனவும் அவ்வறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

ஈரான் உலங்கு வானூர்தி விபத்தில் பலியானவர்களின் உடல்கள் மீட்கப்பட்டுள்ளதாகவும் தற்போது தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஈரானின் கிழக்கு அஸர்பைஜான் மாகாணத்தில் உலங்கு வானூர்தி விபத்துக்குள்ளானதில் ஈரான் அதிபர் இப்ராஹிம் ரைசி மற்றும் வெளியுறவு அமைச்சர் ஹொசைன் அமிரப்டோலாஹியன் ஆகியோர் உயிரிழந்துள்ளனர்.

கடினமான வானிலையிலும் ஒரு மணி நேரத் தேடுதலுக்குப் பிறகு மீட்புப் படையினர் விபத்து நடந்த இடத்தைக் கண்டுபிடித்து உடல்களை மீட்டுள்ளனர் என்று அங்கிருந்து வரும் செய்திகள் தெரிவிக்கின்றன.

(04)

## இப்ராஹிம் ரைசியினுடைய மறைவுக்கு ஜனாதிபதி ரணில் இரங்கல் தெரிவிப்பு



ஈரான் ஜனாதிபதி இப்ராஹிம் ரைசி மற்றும் வெளிவிவகார அமைச்சர் அமீர் அப்துல்லாஹி ஆகியோரின் மறைவுக்கு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இரங்கல் தெரிவித்துள்ளார்.

அவர் தனது அதிகாரப்பூர்வ டுவிட்டர் கணக்கில் வெளியிட்ட ஒரு குறிப்பில், அவர்களின் துயர மரணத்தால் இலங்கை ஆழ்ந்த அதிர்ச்சியும் வருத்தமும் அடைந்துள்ளதாகவும் அவரின் குடும்பத்தினருக்கும், ஈரான் நாட்டு ஜனாதிபதியை இழந்து வாடும் மக்களுக்கும் ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்கொள்கின்றேன்,

2➤

## ஈரானின் பதில் ஜனாதிபதியாக முஹம்மது முக்பர் தற்காலிக வெளியுறவு அமைச்சரும் நியமனம்



ஈரானின் பதில் ஜனாதிபதியாக அந்நாட்டுதுணை ஜனாதிபதி முஹம்மது முக்பர் பதவியேற்கவுள்ளார்.

ஈரானின் அரசியலமைப்பின் பிரகாரம் புதிய ஜனாதிபதி 50 நாட்களுக்குள் தேர்ந்தெடுக்கப்பட வேண்டும். இதேவேளை தற்காலிக வெளியுறவு அமைச்சராக அலி பகேரி கனி நியமிக்கப்பட்டுள்ளார்.

வெளியுறவு அமைச்சர் ஹொசைன் அமிரப்துல்லாஹியன் உயிரிழந்துள்ள நிலையில் ஈரான் அமைச்சரவை, துணை வெளியுறவு அமைச்சர் அலி பகேரி கனியை தற்காலிக வெளியுறவு அமைச்சராக நியமித்துள்ளது.


அவர் செப்டம்பர் 2021 முதல் துணை வெளியுறவு அமைச்சராக பணியாற்றியுள்ளதோடு, கடந்த 2007 மற்றும் 2013 க்கு இடையில் ஈரானின் உச்ச தேசிய பாதுகாப்பு கவுன்சிலின் துணைச்செயலாளராகவும் பணியாற்றியுள்ளார்.

இதேவேளை, ஈரானின் மதத் தலைவர் அலி கமேனி, ஐந்து நாட்கள் தேசிய துக்க தினத்தைப் பிரகடனப்படுத்தப்பட்டுள்ளதாக சர்வதேச ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

(04)

## இலங்கைப் பெற்றோலியக் கூ.தாபனம் கடந்த ஆண்டில் 120.3 பில்லியன் ரூபா இலாபத்தைப் பதிவு செய்துள்ளது

### மத்திய வங்கியின் பொருளாதார அறிக்கையில் தெரிவிப்பு




இலங்கை மத்திய வங்கியினால் வெளியிடப்பட்டுள்ள வருடாந்த பொருளாதார அறிக்கையின்படி, இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் கடந்த ஆண்டில் (2023) 120.3 பில்லியன் ஷரூபா இலாபத்தைப் பதிவு செய்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனம் முன்னதாக 2022 ஆம் ஆண்டில் 617.6 பில்லியன் ஷரூபா நட்டத்தை பதிவு செய்திருந்தது. விலைச்சூத்திரத்தை நடைமுறைப்படுத்தியதன் காரணமாகவே, கடந்த வருடம் 2023 மேற்படி கூட்டுத்தாபனத்தின் மேம்பட்ட நிதிச் செயல்பாட்டிற்கு வழிவகுத்தது எனவும் மத்திய வங்கியின் அறிக்கை குறிப்பிட்டுள்ளது.

2➤

## சா.தரப் பரீட்சையில் விசேட தேவையுடைய மாணவர்களுக்கு நடந்த அநீதிகள் தொடர்பான விசாரணைக்கு வராமல் அதிகாரிகள் நழுவல்

### மனித உரிமைகள் ஆணைக்குழுவில் பெற்றோர் 4 மணி நேரம் காத்திருந்தனர்

இந்த வருட, க.பொ.த. சா.தரத்தில் நிர்ணயிக்கப்பட்ட முறைக்கு புறம்பாக வினாக்களை தயாரித்தமை மற்றும் பரீட்சை நிலையங்களில் இடம்பெற்ற அநீதிகள் தொடர்பில் செய்யப்பட்டிருந்த முறைப்பாடுகளுக்கு அமைய, விசேட தேவையுடைய மாணவர்கள் மற்றும் அவர்களது பெற்றோர்கள் நேற்று மனித உரிமைகள் ஆணைக்குழுவிற்கு சென்றிருந்த போதிலும், பரீட்சைத் திணைக்கள அதிகாரிகள் அங்கு வராமையினால் பெற்றோரும் மாணவர்களும் 4 மணி நேரமாக அலைக்கழிக்கப்பட்டு, ஏமாற்றத்துடன் வீடு திரும்ப வேண்டிய நிலை ஏற்பட்டது.

நடந்துள்ள சம்பவம் தொடர்பில் தமது பிள்ளைகள் மன உளைச்சலுக்கு உள்ளாகியுள்ளதாகக் குறித்த மாணவர்களின் பெற்றோர்கள் குறிப்பிட்டுள்ளனர்.

வத்தளை புனித அந்தோனியார் கல்லூரியின் பரீட்சை நிலையத்தில் விசேட தேவையுடைய பிள்ளைகளுக்கான ஆங்கிலத் வினாத்தாளின் 2 ஆம் பாகத்திற்கான போதிய வசதிகள் செய்து தரப்படவில்லை என பெற்றோர் முன்னதாக புகார் அளித்திருந்தனர். அது தொடர்பில் விடுக்கப்பட்ட அழைப்பின் பிரகாரமே அவர்கள் மனித உரிமைகள் ஆணைக்குழுவிற்கு வருகை தந்திருந்தனர்.

மேலும், கொள்ளுப்பிட்டி மெதடிஸ்த பரீட்சை நிலையத்தில் விசேட தேவையுடைய மாணவியொருவருக்கு 4 பாடங்களில் தோற்றுவதற்கு சிறப்பு மனநல மருத்துவரின் பரிந்துரைகள் பெறப்பட்டிருந்தன. அதன்படி, பரீட்சை மண்டப பொறுப்பாளருக்கு பரிந்துரை கடிதம் ஒன்றை பரீட்சைகள் பிரதி ஆணையாளர்

2➤

- பக்கம் சாராச் செய்திகளுடன் மக்களுக்கான மாலை இதழ் -

# ட்ரோன் தொழிநுட்பத்தின் மூலம் பூச்சிக்கொல்லி மருந்து தெளிப்பு

இவ்வருடம் 15 மாவட்டங்களில் ட்ரோன் தொழிநுட்பத்தைப் பயன்படுத்தி நெல் வயல்களில் பூச்சிக்கொல்லி மருந்து தெளிக்க விவசாய மற்றும் பெருந்தோட்ட கைத்தொழில் அமைச்சு நடவடிக்கை எடுத்துள்ளது. இதன்படி ஹம்பாந்தோட்டை, மொனராகலை, அம்பாறை, மட்டக்களப்பு, பொலன்னறுவை, அனுராதபுரம், குருநாகல், புத்தளம், மன்னார், வவுனியா, கிளிநொச்சி, நுவரெலியா, மாத்தளை, திருகோணமலை மற்றும் கம்பஹா ஆகிய மாவட்டங்களில் இம்முறை நெற்செய்கைக்கு ட்ரோன் தொழிநுட்பத்தைப் பயன்படுத்தி பூச்சிக்கொல்லிகள் தெளிக்கப்பட உள்ளன.

தற்போது ஒவ்வொரு மாவட்டத்திலும் உள்ள விவசாயிகளின் பொதுச் சேவை நிலையங்களுக்கு தலா ஒரு ஆளில்லா விமானத்தை வழங்க விவசாய தொழிநுட்ப சபை ஏற்பாடு செய்துள்ளதாக அதன் தலைவர் காவிந்த திஸாநாயக்க தெரிவித்துள்ளார். (04)

## போலி மருத்துவர்கள் குறித்து அறிவிப்பதற்கு 1907 எனும் தொலைபேசி இலக்கம் அறிமுகம்

### சுகாதார அமைச்சு நடவடிக்கை

போலி மருத்துவர்கள் தொடர்பில் தகவல்களை வழங்குவதற்காக 1907 என்ற தொலைபேசி இலக்கத்தை அறிமுகப்படுத்த சுகாதார அமைச்சு நடவடிக்கை எடுத்துள்ளது. மருத்துவர்கள் போன்று பாவனை செய்து சட்டவிரோதமான முறையில் சிகிச்சை சேவைகளை வழங்கி வரும் 40 ஆயிரத்திற்கும் அதிகமான போலி மருத்துவர்கள் நாட்டில் இருப்பதாக கணக்கெடுப்பு அறிக்கைகள் மூலம் தகவல் வெளியாகியுள்ளதாக அரச வைத்திய அதிகாரிகள் சங்கம் தெரிவித்துள்ளது.

இது விடயமாக ஊடகவியலாளர் சந்திப்பில் கருத்து தெரிவித்த மேற்படி சங்கத்தின் செயலாளர் மருத்துவர் ஹரித்த அலுத்கே, போலி மருத்துவர்கள் தொடர்பில் மக்களை தெளிவுபடுத்தும் வகையில் எதிர்காலத்தில் தேசிய விழிப்புணர்வு வாரமொன்று அறிவிக்கப்படவுள்ளதாக குறிப்பிட்டார்.

பொலிஸ் திணைக்களத்திற்கும் தமது சங்கத்தினருக்கும் இடையே அண்மையில் நடைபெற்ற கலந்துரையாடலின் போது இத்தகைய போலி மருத்துவர்கள், சட்டவிரோத சிகிச்சை நிலையங்கள் மற்றும் அவற்றிற்கு ஒத்தாசை புரிபவர்கள் சம்பந்தமாக சுற்றி வளைப்புக்களை மேற்கொள்வதற்கும், உரிய சட்ட நடவடிக்கைகளை எடுப்பதற்கும் பூரண ஒத்துழைப்பை தருவதற்கு பொலிஸார் தரப்பில் இணங்கியுள்ளதாகவும் மருத்துவர் ஹரித்த அலுத்கே மேலும் தெரிவித்தார்.

(ரெம-75)

### இலங்கை......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

மத்திய வங்கியின் அறிக்கையின் பிரகாரம், 2023 ஆம் ஆண்டு நிறைவடைந்த போது இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் 17.7 பில்லியன் ரூபா நிலுவை கடன்தொகையை அரச நிறுவனங்களிடமிருந்து அறவிடப்பட வேண்டியிருந்தது. இலங்கை விமான சேவை மற்றும் இலங்கை மின்சார சபை ஆகியன கடந்த வருடம் டிசம்பர் மாதம் பெற்றோலிய கூட்டுத்தாபனத்திற்கு செலுத்த வேண்டிய கடன் தொகையானது கடன் மறுசீரமைக்கப்பட்டமையின் காரணமாக அரச நிறுவனங்களின் மொத்த நிலுவைத் தொகை 206.0 பில்லியன் ரூபாவால் குறைந்துள்ளதாகவும் மத்திய வங்கி வெளியிட்டுள்ள பொருளாதார அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ரெம-71)

### இப்ராஹிம்......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

என்றும் குறிப்பிட்டுள்ளார். இதேவேளை, கடந்த ஏப்ரல் மாதம் 24 ஆம் திகதி ஈரான் ஜனாதிபதி இப்ராஹிம் ரைசி இலங்கைக்கு விஜயம் மேற்கொண்டு ஈரானின் நிதியுதவியில் நிர்மாணிக்கப்பட்ட உமா ஓயா பலநோக்குத் திட்டத்தை மக்கள் பாவனைக்காக கையளித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (04)

## ஞானசார தேரருக்கு பொது மன்னிப்பு?

கலகொட அத்தே ஞானசார தேரருக்கு பொது மன்னிப்பை வழங்கவேண்டுமெனக் கோரி ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவிற்கு பிரதான மதகுருக்கள் கடிதம் ஒன்றை அனுப்பியுள்ளனர். இலங்கையில் சிங்கள பௌத்த தேசியத்திற்காக கலகொடஅத்தே ஞானசார தேரர் கடந்த காலங்களில் குரல் எழுப்பியதாகவும், அவரை பொது மன்னிப்பில் விடுதலை செய்ய வேண்டும் என்றும் அந்தக் கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது

இதன்படி, வெசாக் போயா தினத்தில் தேசிய ஒருமைப்பாடு மற்றும் சமூக ஆதரவுடன் செயற்பட்ட ஞானசார தேரருக்கு பொது மன்னிப்பு வழங்குமாறு ஜனாதிபதியிடம் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது

2016 ஆம் ஆண்டு ஊடகவியலாளர் சந்திப்பின்போது இனங்களுக்கிடையில் பிணக்கினை ஏற்படுத்தியதாக கூறப்படும் சம்பவம் தொடர்பில் கைது செய்யப்பட்ட ஞானசார தேரருக்கு, ஏழு வருட சிறைத்தண்டனை விதிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

### சா.தரப்.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

அனுப்பியிருந்தார். எனினும், உரிய வசதிகளின் கீழ் குறித்த சிறுமிக்கு பரீட்சைக்குத் தோற்றுவதற்கு சந்தர்ப்பம் வழங்கப்படவில்லை என அவரது பெற்றோர்கள் ஆணைக்குழுவில் முறைப்பாடு செய்திருந்தனர். அந்தப் பெற்றோரும் இது தொடர்பாக மனித உரிமைகள் ஆணைக்குழுவிற்கு வந்திருந்தனர். ஆனால், பரீட்சை திணைக்கள அதிகாரிகள் சம்பவ இடத்திற்கு வராததால் சுமார் 4 மணிநேரம் காத்திருந்தும் அவர்கள் அனைவரும் வெறுமனே வீடு திரும்பியதாக பெற்றோர் தெரிவித்தனர். இலங்கை ஆசிரியர் சங்கத்தின் பொதுச் செயலாளர் ஜோசப் ஸ்டாலின் இது குறித்து தெரிவிக்கையில்- “விசேட தேவையுடைய பிள்ளைகள் மனித உரிமைகள் ஆணைக்குழுவிற்கு இது விடயமாக வருகை தந்துள்ளனர். பரீட்சை திணைக்களத்திற்கு அழைப்பு கடிதம் அனுப்பப்பட்டும் அங்கிருந்து அதிகாரிகள் எவரும் வரவில்லை. இது குறித்து கல்வித்துறைச் செயலரிடம் தெரிவித்துள்ளோம்,” என்றார். இதேவேளை, மினுவாங்கொட கல்லொலுவ அல் அமான் முஸ்லிம் மகாவித்தியாலய பரீட்சை நிலையத்தில் 14 மாணவர்களுக்கு புவியியல் வினாத்தாளின் முதல் பாகத்தை வழங்காத சம்பவம் தொடர்பிலும் விசாரணை ஆரம்பிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ரெம-72)

## கெஹலிய தரப்பினருக்கு விளக்கமறியல் நீடிப்பு

முன்னாள் சுகாதார அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல உள்ளிட்ட 8 சந்தேக நபர்களை எதிர்வரும் ஜூன் மாதம் 3 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்க மாளிகாகந்த நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

இது தொடர்பான வழக்கு மாளிகாகந்த நீதவான் நீதிமன்றத்தில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட போதே இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

தரமற்ற மனித இம்யூனோகுளோபுலின் மருந்து இறக்குமதிச் சம்பவம் தொடர்பான வழக்கில் சந்தேகநபர்கள் இன்று நீதிமன்றில் முன்னிலைப்படுத்தப்பட்ட போதே இந்த உத்தரவு வழங்கப்பட்டது. (04)

## பெரிய வெங்காய விலை மேலும் குறைவடைந்தது!



சந்தையில் ஒரு கிலோ பெரிய வெங்காயத்தின் மொத்த விலை 50 ரூபாயினால் குறைவடைந்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த காலத்தில் பெரிய வெங்காய ஏற்றுமதிக்கு இந்தியா விதித்த கட்டுப்பாட்டுடன் பெரிய வெங்காயத்தின் விலை கிலோவுக்கு 700 ரூபாயாக அதிகரித்ததன் காரணமாக சீனாவில் இருந்தும் பெரிய வெங்காயத்தை அரசாங்கம் இறக்குமதி செய்தது.

இந்த நிலையில், தற்போது சந்தையில் ஒரு கிலோ பெரிய வெங்காயத்தின் மொத்த விலை 50 ரூபாயினால் குறைவடைந்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இவ்வாறு சடுதியான குறைவின் காரணமாக வெங்காய இறக்குமதியாளர்கள் சிரமத்திற்கு உள்ளாகியுள்ளதாகக் கூறப்படுகிறது.

பெரிய வெங்காயத்தின் ஏற்றுமதி வரம்பை இந்தியா நீக்கியதால், அதிக அளவில் பெரிய வெங்காயம் சந்தைக்கு வந்துள்ளதாக அத்தியாவசிய உணவுகள் இறக்குமதியாளர்கள் சங்கம் தெரிவித்துள்ளது. (04)





செய்திகளையும் இன்னும் பல காணொளிகளையும் பார்வையிட
காலைக்கதிர் TV
YouTube தளம்

உங்கள் பிரதேசத்து நிகழ்வுகள் பற்றிய விபரங்களை எமக்கு அனுப்பிட
maalaikkathir@gmail.com

# வற்றாப்பளை கண்ணகை அம்மனுக்கு பொங்கல்!






முல்லைத்தீவு மாவட்டத்தின்வரலாற்றுச் சிறப்புமிக்க தலங்களில் ஒன்றான வற்றாப்பளை கண்ணகையம்மன் ஆலயத்தின் வருடாந்த பொங்கல் உற்சவப் பெருவிழா இன்றைய தினம் சிறப்புற நடைபெற்றது.

ஏராளமான பக்தர்கள் கலந்துகொண்டு அம்மனைத் தரிசித்தனர். (02)

## வற்றாப்பளை கண்ணகி அம்மன் ஆலயத்தில் சங்நிதி – கதிர்காம பாதயாத்திரைக் குழுவினர்




( வி.ரி.சகாதேவராஜா)

இலங்கையின் மிக நீண்ட சந்நிதி - கதிர்காமம் பாதயாத்திரையை மேற்கொள்ளும் ஜெயாவேல்சாமி தலைமையிலான குழுவினர், ஒன்பது நாட்களின் பின்னர் வரலாற்றுப் பிரசித்தி பெற்ற முல்லைத்தீவு வற்றாப்பளை கண்ணகை அம்மன் ஆலயத்தில் தங்கியுள்ளனர்.

இரு நாள்கள் ஆலயத்தில் தங்கியிருந்து நாளை (21) செவ்வாய்க்கிழமை மீண்டும் யாத்திரையை இவர்கள் ஆரம்பிப்பார்கள் எனத் தெரியவருகிறது.

பாதயாத்திரைக் குழுவினர் நேற்று முன்தினம் வட்டுவாகல் ஸ்ரீ சப்த கன்னியர்கள் ஆலயத்திலிருந்து முல்லைத்தீவு நரசிம்ம ஆலயம் சென்று அங்கிருந்து காட்டு விநாயகர் ஆலயம் சென்று, கொட்டும் மழையில் நனைந்து வற்றாப்பளை கண்ணகை அம்மன் ஆலயத்தினைச் சென்று அடைந்தனர்.

கடந்த 11 ஆம் திகதியன்று இந்தப் பாதயாத்திரை யாழ்ப்பாணம் தொண்டமானாறு செல்வச் சந்நிதி ஆலயத்திலிருந்து ஆரம்பமாகியிருந்தது.




## அஷ்ரப் அருங்காட்சியக நிர்மாணப்பணிகளை துரிதமாக ஆரம்பிக்க நடவடிக்கை முன்னெடுப்பு



(நூருல் ஹுதா உமர்)

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் ஸ்தாபகரும் முன்னாள் அமைச்சருமான மர்ஹூம் எம்.எச்.எம்.அஸ்ரப் நினைவு அருங்காட்சியகம் அமைக்கும் பணிகள் முடுக்கிவிடப்பட்டு, அதன் முதல் கட்ட சிரமதானப்பணி இன்று அவரது சொந்தத் தொகுதியான கல்முனையில் அடையாளம் காணப்பட்ட காணியில் முன்னெடுக்கப்பட்டது.

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் பிரதித்தலைவரும், திகாமடுல்ல மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான சட்டத்தரணிஎச்.எம்.எம்.ஹரீஸ்முன்னிலைப்படுத்தலுடன் கல்முனை மாநகர சபை உத்தியோகத்தர்கள், ஊழியர்கள், அபிமானிகள், ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் முக்கியஸ்தர்களின் பங்குபற்றலுடன் இந்தச் சிரமதானப்பணி இன்று காலை இடம்பெற்றது.

மர்ஹூம் எம்.எச்.எம்.அஷ்ரப் ஆற்றிய சேவைகளை கௌரவிக்கும் வகையில் அவரது 24ஆவது நினைவு தினத்தை முன்னிட்டு நாடாளுமன்ற உறுப்பினர் எச்.எம்.எம்.ஹரீஸ் மற்றும் முஸ்லிம் சமூகத்தினரின் வேண்டுகோளுக்கு இணங்க, ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவின் பணிப்புரைக்கு அமைவாக “அஷ்ரப் நினைவு அருங்காட்சியகம்” நிர்மாணிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு இத்திட்டத்திற்காக 25 மில்லியன் ரூபா முதற்கட்டமாக ஒதுக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. அதற்கான நிர்மாணப் பணிகளை உடனடியாக ஆரம்பிக்குமாறு அதிகாரிகளுக்கு ஜனாதிபதி பணிப்புரை விடுத்திருந்தார்.

## பாலியல் சமத்துவம், மகளிர் கொள்கைகள் பெண்கள் உரிமைகள் தொடர்பான நிகழ்வு

(அஸ்ஹர் இப்றாஹிம்)

தொழிற்சாலைகள் மற்றும் தொழில் நிலையங்களில் பணிபுரியும் இளைஞர் யுவதிகளுக்கான பாலியல் சமத்துவம், மகளிர் கொள்கைகள் மற்றும் பெண்கள் உரிமைகள் தொடர்பான கருத்தரங்கு மட்டக்களப்பு, நாவற்குடா சிவநேசராசா உள்ளக அரங்கில் இடம்பெற்றது.

“பெண்களுக்காக நாம்” அமைப்பினரால் இணை நிறுவனர் பாஹிம் இஸ்மாயில் தலைமையில் இடம்பெற்ற மேற்படி நிகழ்வில் வளவாளர்களாக சமூக செயற்பாட்டாளர் ஜே.எம்.அஸீம், கலைமாணிப் பட்டதாரி மாணவன் எம்.ஐ.எம்.றிப்னாஸ் ஆகியோர் தெளிவூட்டல்களை வழங்கினார்கள்.

தொழிற்சாலை மற்றும் தொழில் நிலையங்களில் பெண்களுக்கெதிரான வன்முறை, பாலியல் சீண்டல்கள், அச்சுறுத்தல்கள், ஊதியம் மறுக்கப்படல், அடிப்படை உரிமைகள் நசுக்கப்படல் போன்ற விடயங்களுக்கு உள்ளாகும்போது சட்ட ரீதியாகப் பெற்றுக் கொள்ளும் தீர்வு மற்றும் இவ்வாறான சந்தர்ப்பங்களில் நடந்து கொள்ளும் முறை தொடர்பாக வளவாளர்களினால் தெளிவாக எடுத்துரைக்கப்பட்டது.

இந்தக் கருத்தரங்கில் மட்டக்களப்பு மாவட்டத்திலிருந்து 30 இற்கும் அதிகமான இளைஞர், யுவதிகள் கலந்து கொண்டனர்.

# நாட்டை பொருளாதார நெருக்கடியிலிருந்து மீட்கும் வல்லமை சஜித் பிரேமதாச தலைமையிலான அணியினரிடமே உள்ளது

## முன்னாள் இராணுவ தளபதி ஜெனரல் மகேஷ் சேனநாயக்க தெரிவிப்பு

பொருளாதார நெருக்கடியிலிருந்து நாட்டை மீட்பதற்கான சிறந்த அணியொன்றை கொண்டுள்ள கட்சி ஐக்கிய மக்கள் சக்தியே எனவும், இந்த நடவடிக்கைக்காக பாதுகாப்பு தரப்பினர் மற்றும் பொது மக்கள் என அனைவரையும் ஒன்றிணைக்கும் பணியில் ஈடுபடவுள்ளதாக முன்னாள் இராணுவத் தளபதி ஜெனரல் மகேஷ் சேனநாயக்க தெரிவித்தார்.

எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாசவின் வேலைத்திட்டத்திற்கு ஆதரவளிப்பதாக கூறி முன்னாள் இராணுவத் தளபதி ஜெனரல் மகேஷ் சேனநாயக்க ஐக்கிய மக்கள் சக்தியில் இணைந்து கொண்டதையடுத்து நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.



முன்னாள் இராணுவத் தளபதி மகேஷ் சேனாநாயக்க மேலும் தெரிவிக்கையில் “இன்று நாட்டின் பாதுகாப்பை விட பொருளாதார நெருக்கடியிலிருந்து நாட்டைக் காப்பாற்ற வேண்டியுள்ளது. தற்போதைய அரசியல் கட்சிகளுள் பொருளாதார நெருக்கடியிலிருந்து நாட்டை மீட்டெடுக்க மிகவும் பொருத்தமான அணியினர் சஜித் பிரேமதாச தலைமையிலான ஐக்கிய மக்கள் சக்தியிலேயே உள்ளனர்.

2019 ஆம் ஆண்டு ஜனாதிபதித் தேர்தலில் நான் கட்சி சார்பற்ற வேட்பாளராகப் போட்டியிட்டேன். எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாசவும் ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிட்டார். 2019 ஆம் ஆண்டு ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிட்டவர்களில் சிலரை குறிப்பிட்டு இவர்களால் நாட்டுக்கு சுபீட்சத்தை கொண்டுவர முடியாது என மக்களுக்கு தெரிவித்திருந்தோம். ஆனால், துரதிஷ்டவசமாக நாங்கள் கூறியதை மக்கள் ஏற்கவில்லை. அந்த நபர்களுக்கே மக்கள் வாய்ப்பு கொடுத்தனர். இறுதியில் நாட்டில் உள்ள அனைவரும் ஒரு சோகமான சூழ்நிலையை எதிர்கொள்ள வேண்டியேற்பட்டது.

எனவே, எதிர்வரும் தேர்தலில் சரியான அணியை தெரிவு செய்ய வேண்டிய பொறுப்பு எமக்கு உள்ளது. ஐக்கிய மக்கள் சக்தியில் சரியான அணியையும் சரியான தலைமையையும் காண்கிறோம். அதனால்தான் இந்த கட்சியுடன் கூட்டு சேர முடிவு செய்தோம்.

சஜித் பிரேமதாச தலைமையிலான ஐக்கிய மக்கள் சக்தி அணியானது, நாட்டின் பொருளாதாரத்தை வலுப்படுத்துவதிலும், நாட்டின் தேசிய பாதுகாப்பை பலப்படுத்துவதிலும் திறனும் தொலைநோக்கு பார்வையும் கொண்டதாகும். எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச நாட்டுக்காக சேவையாற்றிக் காட்டியவர். எனவே, எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாசவுக்கு நமது முழு பலத்தையும் வழங்குவோம்” என்றார். (ரெம-73)



# ஆப்கானில் கடுமையான மழை மரண எண்ணிக்கை உயர்ந்தது!

ஆப்கானிஸ்தானில் பெய்து வரும் கனமழையால் ஏற்பட்ட திடீர் வெள்ளப்பெருக்கு காரணமாக, ஏற்கனவே நூற்றுக்கணக்கான மக்கள் உயிரிழந்ததாகச் செய்திகள் வெளியாகியுள்ள நிலையில், வடக்குப் பகுதியில் ஏற்பட்டுள்ள வெள்ளப் பெருக்கில் சிக்கி உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை எண்ணிக்கை 45 ஐவிட அதிகரித்துள்ளது என சர்வதேச செய்திகள் தெரிவிக்கின்றன

ஆப்கானிஸ்தானில் வழக்கத்திற்கு மாறாக கடுமையான பருவமழை பெய்து வருகிறது. வடக்கு ஆப்கானிஸ்தானில் உள்ள பர்யாப் மாகாணத்தில் பெய்த கனமழையால் அங்குள்ள மூன்று மாவட்டங்கள் கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ளன. (04)

# சபுகஸ்கந்த எண்ணெய் சுத்திகரிப்பு நிலைய மாற்றம் 650க்கும் மேற்பட்ட ஊழியர்கள் வேலை இழக்குமாபத்து!

சபுகஸ்கந்த எண்ணெய் சுத்திகரிப்பு நிலையத்தை தனியான பொது நிறுவனமாக மாற்றியமைப்பதால் 650 இக்கும் மேற்பட்ட ஊழியர்கள் வேலை இழக்கும் அபாயம் ஏற்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.




புதிய நிறுவனத்திற்கு தற்போதைய பணியாளர்களில் சுமார் 200 பேரை மட்டுமே தக்கவைக்க அரசாங்கம் திட்டமிட்டுள்ளது. இதன் பின்னர் எஞ்சியுள்ள பணியாளர்களில் இருந்து, புதிய நிறுவனம் செயல்பாடுகளை பராமரிக்க தேவையான பணியாளர்கள் தேர்ந்தெடுக்கப்படுவார்கள் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. சபுகஸ்கந்த எண்ணெய் சுத்திகரிப்பு நிலையத்தை இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தில் இருந்து துண்டிக்கப்பட்ட அரச நிறுவனமாக செயற்படுத்துவதற்கான முன்மொழிவுக்கு, கடந்த மார்ச் மாதம் அமைச்சரவை அங்கீகா ரம் வழங்கியது. இந்தநிலையில், எதிர்காலத்தில் சபுகஸ்கந்த எண்ணெய் சுத்திகரிப்பு நிலையத்தை மேம்படுத்தப்பட்ட நவீன வசதிகளுடன் திருகோணமலைக்கு மாற்றுவது மற்றும் எரிபொருள் பண்ணையை அபிவிருத்தி செய்வது குறித்து அரசாங்கம் ஆராய்ந்து வருவதாக மின்சக்தி மற்றும் எரிசக்தி அமைச்சர் தெரிவித்துள்ளார்.

குறைந்தபட்சம் இன்னும் 25 ஆண்டுகளுக்கு சுத்திகரிப்பு நிலையத்தின் செயல்பாட்டு திறன் மற்றும் நம்பகத்தன்மையை உறுதி செய்வதே இதன் நோக்கமாகும் எனவும் கூறப்பட்டுள்ளது. (04)

# இராணுவ வாகனம் மோதியதில் யாழ்ப்பாணத்தில் யுவதி சாவு!

*புத்தூர் - கனகம்புளியடி வீதியில் வீரவாணி சந்தியில் இடம்பெற்ற விபத்தில் வாதரவத்தையைச் சேர்ந்தசுதாகரன் சாருஜா என்ற 23 வயதான யுவதி உயிரிழந்துள்ளார்.*

*வீதியைக் கடப்பதற்காக குறித்த யுவதி வீதியோரம் நின்றுள்ளார். இதன்போது, அவர் நின்ற கரைக்கு மறுபுறமாக–எதிர்த்திசையில் புத்தூர்ச் சந்தியிலிருந்து இராணுவ உயரதிகாரிகள் பயணித்த வான் ஒன்று வேகமாக வந்து, வீதியின் வலது கரையில் நின்ற யுவதியை அடித்து, மரத்திலும் அருகில் இருந்த ரோலர் இயந்திரத்துடனும் மோதிக் கவிழ்ந்துள்ளது.*

*விபத்தில் காயமடைந்த யுவதியை வைத்தியசாலைக்குக்கொண்டு செல்லும்வழியிலேயே அவர் உயிரிழந்துவிட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது. பருவநிலை காரணமாக அவரை மருத்துவமனைக்குக் கொண்டு சேர்ப்பதில் தாமதம் ஏற்பட்டதாக அங்கிருந்தவர்கள் தெரிவிக்கின்றனர்.*

*யுவதியின் சடலம் அச்சுவேலி பிரதேச வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளதாகவும், விபத்துச் சம்பவம் தொடர்பாக இராணுவத்தினரிடம் அச்சுவேலி பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர் என்றும் குறிப்பிடப்படுகிறது.*

*மரணமடைந்த யுவதியின் பிறந்தநாள் இன்று என்பதும் அறியக்கிடைத்துள்ளது. (01)*



# யாழ் நண்பர்களின் 10வது வருட நிறைவும் சமூகப் பெரியோர்களின் கௌரவிப்பும்





யாழ் நண்பர்களின் பத்தாவது வருட நிறைவு நிகழ்வும் சமூகப் பெரியோர்களின் கௌரவிப்பும் நேற்று யாழ்ப்பாணத்தில் இடம்பெற்றது.

தனியார் விடுதி ஒன்றில் பிற்பகல் 2 மணி அளவில் ஆரம்பமான இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக வடமாகாணத்தின் ஆளுநர் பி.எஸ்.எம்.சார்ள்ஸ் கலந்து கொண்டிருந்தார்.

கௌரவ விருந்தினராக இந்தியத் துணைத் தூதரகத்தின் கல்வி கலாசார் பிரிவின் பொறுப்பதிகாரி ஸ்ரீ மனோஜ் குமார், 512 பிரிகேட் பிரிவின் அதிகாரி சுஜித் குலசேகர ஆகியோர் பங்கேற்றனர்.

குறித்த நிகழ்வில் ஸ்ரீ விமல தேரர், நல்லை ஆதீனம், கலாநிதி ஆறு திருமுருகன், அமரர் இசைமணி ராமநாதன், வைத்தியசூரி சே.பரமசிவம்பிள்ளை, பேராசிரியர் பொன் பாலசுந்தரம்பிள்ளை, மேஜர் ஜெனரல் தர்ஷினி உதய குமார, கலாநிதி எம்பி நடராஜன் போன்ற பலரும் கௌரவிக்கப்பட்டனர்.

(01)

## புனித ஹஜ் கடமையை நிறைவேற்ற முதலாவது ஹஜ் குழு மக்கா பயணம்



(எம்.எஸ்.எம்.ஸாகிர்)

புனித ஹஜ் கடமையை நிறைவேற்றுவதற்காக அம்பாறை மாவட்டத்தில் இருந்து முதலாவது ஹஜ் குழு இன்று திங்கட்கிழமை சாய்ந்தமருது ஜ/ம் ஆப் பெரிய பள்ளிவாசலிலிருந்து புறப்பட்டது.

மௌலவி எம்.எஸ்.எம். சு/ஹருதீன் தலைமையிலான முதலாவது குழுவில் ஆண்கள், பெண்கள் என இம்முறை 68 பேர் புனித ஹஜ் கடமையை நிறைவேற்றுவதற்காக மக்கா செல்கின்றனர்.

இதில் சாய்ந்தமருது பிரதேசத்தில் இருந்து 25 பேர் உள்ளடங்குவர். இக்குழுவில் முஹம்மத் மௌலவியும் வழிகாட்டியாகச் செல்கிறார்.

நிகழ்வில் மௌலவி சபானிஸ் துஆப் பிரார்த்தனை மேற்கொண்டார்.

இக்குழுவினர் நாளை செவ்வாய்க்கிழமை (21) அதிகாலை 5.30 க்கு புனித மக்கா பயணமாகவுள்ளனர்.

மேற்படி வழியனுப்பும் நிகழ்வில், ஹஜ் கடமையை நிறைவேற்றச் செல்லும் ஹாஜிமார், ஹாஜியானிகள் மற்றும் அவர்களது உறவினர்கள், பள்ளிவாசல் நிர்வாகிகள், நம்பிக்கைப் பொறுப்பாளர் சபையினர், மறைக்காயர்மார்கள், ஊடகவியலாளர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.



## கல்முனை யங் பேட்ஸ் ஜனாஸா நலன்புரிச் சேவை வாகனக் கொள்வனவுக்கு பணவுதவி வழங்கிவைப்பு

(எம்.ஏ.ஏ.அக்தார்)

கல்முனை யங் பேட்ஸ் ஜனாஸா நலன்புரி அமைப்பிற்கும் வர்த்தகர் ரிஸ்லி முஸ்தபாவுக்குமான சந்திப்பொன்று அமைப்பின் காரியாலயத்தில் இடம்பெற்றது.

கல்முனை யங் பேட்ஸ் ஜனாஸா நலன்புரி அமைப்பின் இச்சேவைக்கு ஆதரவு வழங்கி ஊக்குவிக்கும் நோக்கில் இடம்பெற்ற இச்சந்திப்பின்போது, ஜனாஸா நலன்புரிச் சேவைக்கு வாகன கொள்வனவுக்காக 250,000 ரூபாய் தொகையை வர்த்தகர் றிஸ்லி முஸ்தபா வழங்கி வைத்தார்.

இந்நிகழ்வில் கல்முனை யங் பேட்ஸ் ஜனாஸா நலன்புரி அமைப்பின் தலைவர் எம் எம் மர்சூக், செயலாளர் எம் வை பாயிஸ், கணக்குப் பரிசோதகர் ஏ சி பௌசர், முகாமையாளர் ஏ வி அர்ஷாத், உப தலைவர் ஏ எம் ஹில்மி, உப பொருளாளர் எம் எச் இக்ரம், அணித்தலைவர் உட்பட உயர் பீட உறுப்பினர்கள் கலந்து கொண்டனர்.



# ஈரான் அதிபரின் மறைவுக்கு மக்கள் காங்கிரஸ் தலைவர் ரிஷாட் அனுதாபம்

ஈரான் அதிபர் இப்ராஹிம் ரைஸி, ஈரானிய வெளிவிவகார அமைச்சர், தப்ரிஸ் மஸ்ஜிதின் இமாம் மற்றும் கிழக்கு அஜர்பைஜான் ஆளுநர் உள்ளிட்ட குழுவினர் ஹெலிகொப்டர் விபத்துகுள்ளாகி பலியான துயரச் செய்திக்கு தனது ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக்கொள்வதாகவும், அவர்களின் அகால மறைவு ஈடு செய்ய முடியாத பேரிழப்பாகும் என்றும் அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான ரிஷாட் பதியுதீன் தெரிவித்துள்ளார்.

அவர் தனது அனுதாபச் செய்தியில்,

“இந்த எதிர்பாராத துயரச் சம்பவம் ஈரான் மக்களுக்கு மட்டுமின்றி, ஒட்டுமொத்த முஸ்லிம் மக்களுக்கும் பெரும் கவலையை ஏற்படுத்தியுள்ளது.

ஜனாதிபதி ரைஸி, அர்ப்பணிப்புள்ள இரக்கம் கொண்ட தலைவராக இருந்தார். ஈரான் மற்றும் இஸ்லாமிய உலகின் முன்னேற்றத்திற்காக அயராது உழைத்தவர். ஈரானின் அரசியல், சமூக மற்றும் மத விவகாரங்களில் அவரின் பங்களிப்புகள் தலைமுறை தலைமுறையாக நினைவுகூரப்பட்டு போற்றப்படும்.



மேலும், பாலஸ்தீன மண்ணுக்காகவும் மக்களின் உரிமைக்காகவும் துணிச்சலுடன் செயலாற்றியதில் ஈரான் அதிபர் இப்ராஹிம் ரைஸி அவர்களின் பங்களிப்பு அளப்பரியது. சுதந்திர பாலஸ்தீனம் உருவாக வேண்டும் என்பதில், முன்னின்று உழைத்த, துணிச்சல் மிக்க முன்னணி அரசியல் தலைவராக விளங்கியவர்

அதேபோன்று, இலங்கையானது ஈரானின் மனிதாபிமான உதவிகளை பல்வேறு சந்தர்ப்பங்களில் பெற்றுள்ளது. எங்களுக்கு தேவைகளும், பொருளாதார பிரச்சினைகளும் ஏற்பட்ட போதெல்லாம் அவர்கள் ஆதரவு வழங்கியுள்ளனர். அந்த உதவிகளை நாம் இன்றும் நன்றியுடன் நினைத்துப்பார்க்கிறோம். இரு நாடுகளுக்குமிடையிலான உறவு எந்த சந்தர்ப்பத்திலும் வலுப்பெறும் என்பதில் நான் உறுதியான நம்பிக்கையை கொண்டிருக்கிறேன். இந்த துக்ககரமான தருணத்தில், எமது பிரார்த்தனைகள் விபத்தில் மரணித்தவர்களுக்கும் அவர்களின் உறவுகளுக்கும் மற்றும் ஈரான் மக்களுக்கும் என்றுமே இருக்கும். மரணித்தவர்களுக்கு எல்லாம் வல்ல அல்லாஹ்! ஜன்னத்துல் பிர்தௌஸ் எனும் உயர்மிகு சுவனத்தை வழங்கவும், அவர்களின் அன்புக்குரியவர்களுக்கு இந்த பேரிழப்பைத் தாங்கும் வலிமையையும் பொறுமையையும் வழங்க வேண்டுமெனவும் பிரார்த்திக்கிறோம்.

“எந்தவொரு ஆன்மாவும் மரணத்தை சுவைத்தே தீர வேண்டும்” என்ற நியதியின் படி, இந்த இழப்பையும் பொறுத்துக்கொண்டு ஆறுதல் அடைவோம்” என்று குறிப்பிட்டுள்ளார்.

# பெரிய நீலாவணை பொலிஸ் பிரிவில் ஐஸ் போதைப்பொருளுடன் ஒருவர் கைது

*(அஸ்ஹர் இப்றாஹிம்)*

*கல்முனை,மருதமுனைபிரதேசத்திலுள்ள பாடசாலை மாணவர்களுக்கு ஐஸ்போதைப் பொருட்களைமிகவும்சூட்சுமமான முறையில் விற்பனை செய்து வந்த 24 வயதுடைய நபரொருவரை பெரிய நீலாவணை பொலிஸார் கைது செய்து கல்முனை நிதவான் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்த நடவடிக்கைகள்மேற்கொள்ளப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.*

*மருதமுனை,பெரிய நீலாவணை பிரதேசத்தில்சந்தேகத்திற்கிடமான நிலையில் நடமாடிய இளைஞரொருவரை திடீரென சோதனையிட்ட போது அவரிடமிருந்து 2*



*கிராம் 360 மில்லி கிராம் நிறைவுடைய ஐஸ் போதைப்பொருள் கைப்பற்றப்பட்டுள்ளது.*

*குறித்த சந்தேக நபர் அப்பிரதேசப் பாடசாலை மாணவர்களுக்கு சூட்சுமமான முறையில் போதைப்பொருட்களை விற்பனை செய்து வந்ததாக ஆரம்ப கட்ட விசாரணையில் தெரிய வந்துள்ளதாகக் கூறப்படுகின்றது.*

*கைது செய்யப்பட்ட சந்தேக நபர் தொடர்பில் பெரிய நீலாவணை பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி ஜே.எஸ். கே.வீரசிங்கவின் வழிகாட்டலில் விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.*








## காட்டு யானைகளிடமிருந்து விவசாயிகளை பாதுகாக்க அவசர நடவடிக்கை முன்னெடுப்பு

(எம்.எப்.நவாஸ்)

பொத்துவில் கிராங்கோவை பகுதியில் அண்மையில் ஒரு விவசாயி காட்டு யானை தாக்கி மரணித்ததோடு இன்னுமொருவர் காயமடைந்துமிருந்தார்.

நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.எம்.எம்.முஷாரப் குறித்த கிராங்கோவை பகுதிக்குச் சென்றதோடு பொத்துவில் பிரதேச செயலாளர், பொத்துவில் பிரதேச சபைச் செயலாளர், வனவிலங்குப் பொறுப்பதிகாரி, பாதுகாப்புப் படைப் பொறுப்பதிகாரிகளையும் குறித்த இடத்திற்கு அழைத்திருந்தார்.

குறித்த சந்திப்பில், விவசாயிகளின் பிரச்சினைகளைக் கேட்டறிந்த அதிகாரிகள், அவசரமாக அவர்களின் தேவைகளைப் பூர்த்தி செய்து கொடுப்பதோடு, காட்டு யானைகளிடமிருந்து அவர்களைப் பாதுகாப்பதற்கான வழிவகைகளை ஏற்படுத்தித் தருவதாகவும் குறிப்பிட்டிருந்தார்கள்.

அது மாத்திரமல்லாமல், நாடாளுமன்ற உறுப்பினரின் உத்தரவுக்கமைய விவசாயிகளின் போக்குவரத்திற்கு அச்சுறுத்தலாக உள்ள வீதியோர பற்றைக்காடுகள் அழிக்கப்பட்டுப் பாதை சீர் செய்து கொடுக்கப்பட்டது.

## யாழ் போதனா வைத்தியசாலை முன்புறமாக வீதியில் மரநடுகை



யாழ்போதனா வைத்தியசாலை, யாழ் மாநகர சபை, மற்றும் கிறீன் லேயர் சுற்றுச்சூழல் அமைப்பு ஒன்றாக இணைந்து மேற்கொண்ட நடவடிக்கையில் வைத்தியசாலையின் முன்புறமாகவுள்ள வீதியின் நடுப்பகுதியில் மரங்கள் நாட்டப்பட்டன.

வைத்தியசாலை வீதியானது பொது மக்களின் அதிகரித்த பாவனையில் உள்ள சன நெரிசலான பகுதி. தினமும் பல்லாயிரக்கணக்கான மக்கள் வீதியின் ஊடாக நடந்தும் வாகனங்களிலும் பயணிக்கின்றார்கள்.

இப்பகுதியில் காணப்படும் கடுமையான வெயில், வெப்பம் மற்றும் புறக் காரணிகளால் அவர்களுக்கு மிகவும் சிரமம் ஏற்படுகின்றது.

இந்நிலையில் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலை, யாழ் மாநகர சபை, மற்றும் கிறீன் லேயர் சுற்றுச்சூழல் அமைப்பு ஆகியன ஒன்றாக இணைந்து, இரு வழி வீதியின் நடுப்பகுதியில் பொருத்தமான குழிகளை வெட்டி, தேவையான உரம் கலந்த மண்ணை இட்டு, பாதுகாப்பன வகையில் உயர்ந்து வளரக்கூடிய நிழல் மரங்களை நட்டுள்ளனர்.

இதள போன்று சில வருடங்களுக்கு முன்னர் நாட்டப்பட்ட மரங்கள், இன்று நன்கு வளர்ந்து நிழல்தருகின்றமை குறிப்பிடத்தக்கது.




இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல - 08, Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 20.05.2024இல் வெளியிடப்பெற்றது.